# திமுக-விசிக பயங்கர மோதல்

●கற்கள் வீசி, கட்டையால் தாக்கியதால் பரபரப்பு ●10 பேர் படுகாயம்





**குன்னம், மே 27:** பெரம்பலூர் அருகே திமுக-விசிகவினரிடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. இதில் 10க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், எம்பி கனிமொழி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா எம்.பி ஆகியோரை பொது வெளியிலும், இணையதளத்திலும், விசிக குன்னம் தொகுதி மாவட்ட செயலாளர் அன்பானந்தன் தரக்குறைவாக பேசி வந்ததாக கூறப்படுகிறது. இதைத்தொடர்ந்து பெரம்பலூர் மாவட்ட திமுக இளைஞரணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நேற்று காலை குன்னத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக அறிவித்து இருந்தனர். இதேபோல் ஆ.ராசா எம்பியை கண்டித்து விசிக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் குன்னத்தில் நடைபெற உள்ளதாக விசிகவினர் அறிவித்திருந்தனர். இரண்டு தரப்பினருக்கும் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு காவல்துறையினர் அனுமதி வழங்கவில்லை.

இந்நிலையில் நேற்று குன்னம் பஸ் நிலையத்தில் ஆங்காங்கே இரண்டு கட்சியினரும் கூட்டமாக கூடிநின்றனர். அப்போது குன்னம் தொகுதியில் வெற்றி பெற்ற சிவசங்கருக்காக, திமுக நிர்வாகிகள், கட்சியினர் ஆலத்தூர் பகுதி மேலமாத்தூர் வரிசைபட்டி உள்ளிட்ட கிராமங்களுக்கு நன்றி தெரிவிக்க காரில் சென்றனர். அப்போது குன்னம் பேருந்து நிலையம் அருகே கூடியிருந்த விசிகவினர் காரில் சென்ற திமுகவினரை வழிமறித்து தகராறில் ஈடுபட்டனர். இதில் இரண்டு கட்சிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. விசிகவினர் கல் மற்றும் கட்டையால் திமுகவினரை பயங்கரமாக தாக்கியதாக கூறப்படுகிறது.

தகவலறிந்த பெரம்பலூர் எஸ்பி லலித்குமார், மங்களமேடு டிஎஸ்பி ஆனந்தி தலைமையில் போலீசார் இரு தரப்பினரையும் அங்கிருந்து அப்புறப்படுத்தினர். அப்போது அவர்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் காவலர் ஒருவரை கீழே தள்ளிவிட்டனர். இந்த போராட்டத்தால் பேருந்துக்காக காத்திருந்த பொதுமக்கள் தலைதெறிக்க ஓடினர். இதனால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. தொடர்ந்து அதிவிரைவுப்படை போலீசார் களமிறங்கி திமுக மற்றும் விசிகவினரை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

இந்த மோதலில் திமுகவை சேர்ந்த முன்னாள் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் புகழேந்தி, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் குன்னம் ரமேஷ் உள்பட திமுகவினர் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# அமைச்சர் செங்ஸ் ஆசியோட தவெகவில் இணைந்தால் | ரூ.300 கோடி மோசடி கேஸ் க்ளோஸ்னு சொன்னாங்க...

**நீதிபதி முன் வின் ஸ்டார் சிவக்குமார் கதறல்**

**சேலம், மே 27:** அமைச்சர் செங்கோட்டையன் முன்னிலையில் தவெகவில் இணைந்தால் பிரச்னையை முடித்து கொடுப்பார் என ஊரைச்சேர்ந்தவர்கள் அழைத்து சென்றதாக வின் ஸ்டார் சிவக்குமார் கதறி அழுதார்.

சேலத்தில் வின் ஸ்டார் இந்தியா சிட்டி டெவலப்பர்ஸ் என்ற பெயரில் ரியல் எஸ்டேட் உள்பட பல்வேறு தொழில்களை செய்து வந்தவர் ஈரோடு சிவகிரியை சேர்ந்த சிவக்குமார். தன்னிடம் முதலீடு செய்பவர்களுக்கு இரட்டிப்பாக பணம் வழங்கப்படும் என கூறியதால் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அவரை நம்பி முதலீடு செய்தனர். ஆனால், வசூலித்த பணத்துடன் அவர் தலைமறைவானார். சிவக்குமார் ரூ.300 கோடி மோசடி செய்து உள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக சேலம் பொருளாதார குற்றப்பிரிவு போலீசார், சிவக்குமார் மற்றும் அவரிடம் பணியாற்றிய மேலாளர்கள் என 30 பேர் மீது வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதில், 2,300 பேர் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு விசாரணை கோவை டான்பிட் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடந்து வரும் நிலையில், இன்னும் ஆயிரக்கணக்கானோர் புகார் அளிக்காமல், சிவக்குமார் பணத்தை திருப்பி தருவார் என நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் பெத்தநாயக்கன்பாளையத்தில் சிங்கப்பூர் சிட்டி என்ற பெயரில் சிவக்குமார் 8 லட்சத்து 85 ஆயிரத்து 65 சதுர அடி நிலத்தை 1,134 பிளாட்டுகளாக பிரித்து வைத்திருந்தார். இதனை சேலத்தை சேர்ந்த அரசியல் பிரமுகர் மணிகண்டன் ரூ.23 கோடியே 4 லட்சத்து 41 ஆயிரத்து 25க்கு ஏலம் எடுத்தார். ஆனால் தற்போது தன்னால் பணத்தை கட்டமுடியாது என கைவிரித்துவிட்டார். இந்நிலையில் ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அக்பர் அலி இந்த வழக்கிற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 3 நாட்களுக்கு முன்பு சேலம் வந்து பொறுப்பேற்றுக்கொண்டார். இதையடுத்து ஏலம் எடுத்த மணிகண்டன் மற்றும் ஏலத்தில் கலந்து கொண்ட 10 ரியல் எஸ்டேட் அதிபர்கள், வின் ஸ்டார் சிவக்குமார் ஆகியோருக்கு சம்மன் அனுப்பப்பட்டது. கலெக்டர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் ஓய்வு பெற்ற ஐகோர்ட் நீதிபதி அக்பர்அலி, டிஎஸ்பி ஹரிசங்கரி உள்பட அனைவரும் கலந்து கொண்டனர்.

நிலத்தை எடுத்த மணிகண்டன், நான் அதிகமான தொகைக்கு ஏலத்தை எடுத்து விட்டேன், அந்த இடம் வேண்டாம். என்னை மன்னித்து விடுங்கள் என்றார். இதனால் கோபம் அடைந்த நீதிபதி, அவருக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார். இவருக்கு பின்னால் ஏலம் எடுத்தவர்களிடம் நிலத்தை பெற்றுக்கொள்கிறீர்களா? என கேட்கப்பட்டது. 3வதாக ஏலம் கேட்டவர் சதுரடி ரூ.235 என்றால் நிலத்தை எடுப்பதாக கூறினார். ஆனால் இதற்கு போலீசார் மறுப்பு தெரிவித்து விட்டனர். கூடுதல் தொகைக்கு நிலத்தை வாங்கினால் பரிசீலிப்பதாக அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர்.

இதற்கிடையில் கூட்டத்திற்கு வந்த வின் ஸ்டார் சிவக்குமார் குமுறி குமுறி அழுதார். அவரை அதிகாரிகள் சமாதானப்படுத்தியும் கேட்காமல் அழுதுகொண்டே இருந்தார். நான் யாருக்கும் துரோகம் செய்யவில்லை. நான் துரோகம் செய்ததாக கூறுகின்றனர். இந்த அவமானத்தோடு வாழமாட்டேன், தற்கொலை செய்து கொள்வேன் என திரும்பத்திரும்ப கூறினார். பணமதிப்பிழப்பினால் தான் சிக்கிக்கொண்டேன் எனவும் கூறினார். தவெகவில் இணைந்தால் பிரச்னையை அமைச்சர் செங்கோட்டையன் முடித்துக் கொடுத்து விடுவார் என என்னை எங்கள் ஊர்காரர்கள் அழைத்து சென்றனர். வழக்கில் உள்ள எனது நிலத்தை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யலாம் என கூறியதுடன், நிலத்தை விற்பனை செய்து மீதமிருக்கும் பணத்தை என்னிடம் கொடுத்து விடுங்கள் என கூறினார்.

இந்நிலையில் நிலம் விற்பனை தொடர்பாக பொருளாதார குற்றப்பிரிவு போலீசாரும், கமிட்டி தலைவரான நீதிபதியும் ஆலோசனை நடத்தினர். மேலும் நிலம் விற்பனை செய்யும் விவகாரத்தில் வின் ஸ்டார் சிவக்குமார் தலையிட கூடாது, அதே நேரத்தில் நிலத்தை விற்பனை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக வழங்க பட்டியல் எடுத்து வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.



# அம்மா உணவகம் செயல்பாடு குறித்து அரசு டாக்டர்களிடம் தவெக எம்எல்ஏ ஆலோசனை




**நெட்டிசன்கள் கிண்டல்**

**திருப்பூர், மே 27:** திருப்பூர் பெரிச்சிபாளையம் பகுதியில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தில் திருப்பூர் தெற்கு தொகுதி எம்எல்ஏ பாலமுருகன் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அம்மா உணவக நிர்வாகத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அதிகாரிகளை அவர் நேரில் அழைத்து ஆலோசனை மேற்கொண்டு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை மருத்துவமனை வளாகத்திலேயே உள்நோயாளிகளுக்கு 3 நேரமும் உணவுகள் தயார் செய்யப்பட்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்தச்சூழலில், அம்மா உணவக குறைபாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகளை அணுகி ஆலோசிப்பதற்கு பதிலாக, மருத்துவ கல்லூரி அதிகாரிகள், மருத்துவர்களை எம்எல்ஏ பாலமுருகன் நேரில் வரவழைத்து ஆலோசனை நடத்தினர். அம்மா உணவகம் நிர்வாகத்தினர், அம்மா உணவக செயல்பாடுகள் எங்களின் கட்டுப்பாட்டில் இல்லை, அது மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது என கூறினர். அதையும் பொருட்படுத்தாத எம்எல்ஏ, மருத்துவர்களின் அவசர பணி நேரத்தை கருத்தில் கொள்ளாமல், அவர்களை தன்முன்னே நிறுத்தி அம்மா உணவகம் தொடர்பாக நீண்ட ஆலோசனையும், அறிவுரைகளும் வழங்கியுள்ளார். அம்மா உணவகம் எந்த துறையின் கீழ் வருகிறது என தெரியாமல் வந்து சம்பந்தம் இல்லாத மருத்துவர்களிடம் ஆலோசனை நடத்திய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. வெறும் சோசியல் மீடியா கன்டென்டுகளுக்காக மருத்துவர்களை அலைக்கழிக்கும் வகையில் இவர்களின் செயல்பாடு அமைந்திருப்பதாக பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். மேலும், எந்த துறையின் கீழ் அம்மா உணவகம் வருகிறது என்பது கூட தெரியாமல் எம்எல்ஏ ஆலோசனை நடத்தியதை நெட்டிசன்கள் கிண்டலடித்து வருகின்றனர்.

சோதனை என்ற பெயரில் ஓவர் அட்ராசிட்டி

# பிரசவ வார்டுக்குள் அத்துமீறி தவெக எம்எல்ஏக்கள் ஆய்வு

**குழந்தைகள் வார்டில் செருப்புடன் 'என்ட்ரி'**

**பொதுமக்கள், நோயாளிகள் கடும் கண்டனம்**



▶ தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தவெக எம்எல்ஏக்கள் மற்றும் நிர்வாகிகள் ஆய்வு என்று கூறி கூட்டமாக புகுந்தனர்.

**ஆண்டிபட்டி, மே 27:** தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள பிரசவ வார்டுக்குள் தவெக எம்எல்ஏக்கள் அத்துமீறி நுழைந்து ஆய்வு செய்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதேபோல் குழந்தைகள் வார்டு பகுதியில் தவெக எம்எல்ஏக்கள் கூட்டமாக நிர்வாகிகளுடன் செருப்பு அணிந்துசென்றனர். இதற்கு நோயாளிகள், பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகேக.விலக்கு பகுதியில் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இயங்கி வருகிறது. நேற்று தவெக எம்எல்ஏக்கள் கம்பம் ஜெகநாத் மிஸ்ரா, பெரியகுளம் சபரி ஐங்கரன் ஆகியோர் ஆய்வு பணிக்காக நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகளுடன் மருத்துவமனைக்கு வந்தனர். அவர்கள், மற்ற பொது வார்டுகளை எதையும் ஆய்வு செய்யாமல், நேரடியாக எம்.ஆர்.ஐ (MRI) ஸ்கேன் மையத்திற்குள் மொத்தமாக நுழைந்தனர். அதிநவீன கருவிகள் கொண்ட அந்த மையத்திற்குள் நுழையும்போது, விதிகளின்படி செருப்புகளை கழற்றிவிட்டுச் செல்ல வேண்டும். ஆனால், நூற்றுக்கும் மேற்பட்டோர் செருப்புகளை கழற்றாமலேயே உள்ளே புகுந்ததால் அங்கிருந்த ஊழியர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தொடர்ந்து தவெக எம்எல்ஏக்கள் மற்றும் கட்சியினர் நேரடியாக பிரசவ வார்டு மற்றும் பச்சிளங்குழந்தைகள் வார்டை நோக்கிச் சென்றனர். பெண்கள் மற்றும் பிரசவ வார்டுக்குள் ஆண்கள் நுழைவதற்கு அனுமதியில்லை என்று மருத்துவமனை நிர்வாகம் சார்பில் வார்டுக்கு வெளியே தெளிவான அறிவிப்புப்பலகை வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த விதிமுறைகளை முற்றிலும் காற்றில் பறக்கவிட்டு, தவெக எம்எல்ஏக்கள் மற்றும் நிர்வாகிகள், செருப்பை கூட கழற்றாமல் கூட்டமாக பிரசவம், பச்சிளம் குழந்தைகள் வார்டுக்குள் அத்துமீறி நுழைந்தனர். இதனால் அங்கு சிகிச்சையில் இருந்த பெண் நோயாளிகள் மற்றும் கர்ப்பிணிகள் பதற்றமும், அச்சமும் அடைந்தனர். இச்சம்பவம் குறித்து சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் தரப்பில் கடும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.


**தெற்கு இரயில்வே**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். MAS/EGS/ET/10/2026-2027**
**தேதி: 25-05-2026**

**பணி பற்றிய விவரம்: சென்னை கோட்டம்:** தண்டையார்பேட்டை மார்ஷலிங் யார்டில் (TNPM) இரண்டு அடுக்கு ஒளி (லைட்டிங்) ஏற்பாடுகளுக்கு விரிவாக்கம் செய்தல் - அதற்கான மின்சார (எலக்ட்ரிக்கல்) ஏற்பாடுகள்

**ஒப்பந்தப்புள்ளி எண்:** ME-29-II-1079RII-2026

**பணியின் மதிப்பு ரூ:** Rs.1,17,37,988/- (ரூபாய் ஒரு கோடியே பதினேழு இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து தொளாயிரத்து எண்பத்து எட்டு மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி பற்றிய மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.ireps.gov.in

**முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் / பொது / சென்னை**

**தென் கிழக்கு மத்திய ரயில்வே**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**வ.எண். மின்– ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:** SrDEE–G–R–OTP–26–27.07, **தேதி:** 26.05.2026 **பணி:** துர்க் நகரை மையமாகக் கொண்ட முதன்மை ரயில்களின் குளிர்சாதனப் பெட்டிகளில், குளிர்சாதனப் பெட்டி மின் உதவியாளர் (ACCEA) பணியை மூன்று ஆண்டுகளுக்கு அவுட்சோர்சிங் மூலமாக வழங்குதல். **ஒப்பந்தப்புள்ளி மதிப்பு:** ரூ.4,12,04,407.02/– **முன்வைப்புத் தொகை:** ரூ. 3,56,000.00 **ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு:** 18.06.2026 அன்று 16:00 மணி வரை. மேற்கண்ட பணி தொடர்பான முழுமையான விவரங்கள்/டெண்டர் ஆவணத்தைப் பெறுதல், தகுதி வரையறைகள் மற்றும் முழுமையான விவரங்களுக்கு Sr.DEE/G/R அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும். அல்லது **www.ireps.gov.in** என்ற எங்கள் இணையதளத்தில் கிடைக்கும் டெண்டர் ஆவணத்தைப் பார்க்கவும்/பதிவிறக்கம் செய்யவும். நேரடியாகச் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அனுமதிக்கப்படாது; அவ்வாறு நேரடியாகப் பெறப்படுபவை நிராகரிக்கப்படும்.

**சீனியர் கோட்ட மின் பொறியாளர் / RS&G, தென்கிழக்கு மத்திய ரயில்வே, ராய்ப்பூர்**
PR/R/Sr.DEE (RS&G)/AAA/79
South East Central Railway @secrail


ஜோலார்பேட்டையில் பயங்கரம்

# போதையில் 17 வயது சிறுவன் ஓட்டிய கார் மோதி பள்ளி மாணவன் பலி

**தாத்தா, பேத்தி படுகாயம்: மினிவேன், 4 பைக்குகள் மீது அடுத்தடுத்து மோதல்**



**ஜோலார்பேட்டை, மே 27:** ஜோலார்பேட்டை அருகே காரை போதையில் 17 வயது சிறுவன் தாறுமாறாக ஓட்டியதில் மினிவேன், 4 பைக்குகள் மீது அடுத்தடுத்து மோதியது. இதில் பள்ளி மாணவன் இறந்தான். அவனது தாத்தாவும், சகோதரியும் படுகாயமடைந்தனர்.

திருப்பத்தூரில் இருந்து மது போதையில் ஒருவர் நேற்று முன்தினம் மாலை காரை தாறுமாறாக ஓட்டிக்கொண்டு ஜோலார்பேட்டை ஜங்ஷன் பஸ் நிறுத்தம் வழியாக வந்துள்ளான். அப்போது எதிரே திருப்பத்தூர் அடுத்த கூடப்பட்டு பகுதியைசேர்ந்தபெருமாள் (55) என்பவர் பைக்கில் வந்தார். அவரது பைக்கில் பேரன் மவுனிஷ் (11), பேத்தி அனுஷ்கா (17) ஆகியோர் வந்தனர். தாறுமாறாக வந்த கார், இவர்களது பைக் மீது நேருக்கு நேர் மோதியது. இதில் மூவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர். இருப்பினும் கார் நிற்காமல் மின்னல் வேகத்தில் சென்றது. தொடர்ந்து போலீஸ் ஸ்டேஷன் ரோடு பகுதியை கடந்த அந்த கார், அவ்வழியாக வந்த மினிவேன் மற்றும் 4 பைக்குகள் மீதும் அடுத்தடுத்து மோதியபடி சென்றது. இதைக்கண்ட பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். சில இளைஞர்கள் ஒன்றிணைந்து அந்த காரை விரட்டிச்சென்றனர்.

ஜோலார்பேட்டை சிறு விளையாட்டரங்கம் அருகே அந்த காரை சுற்றிவளைத்து பிடித்தனர். அப்போது காரை ஓட்டிவந்தது சிறுவன் என தெரியவந்தது. அவனுக்கு தர்ம அடி கொடுத்தனர். தகவலறிந்து வந்த ஜோலார்பேட்டை போலீசார் அந்த சிறுவனை மீட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விசாரணையில் காரை ஓட்டி வந்தது பழைய ஜோலார்பேட்டை பகுதியை சேர்ந்த 17 வயது சிறுவன் என தெரிய வந்தது. சிறுவன் ஓட்டிய கார் மோதியதில் படுகாயமடைந்த தாத்தா, பேரன் மற்றும் பேத்தியை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் சிறுவன் மவுனிஷ் வழியிலேயே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். தொடர்ந்து பெருமாள் மற்றும் அனுஷ்காவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து போலீசார் கூறுகையில், பலியான மவுனிஷின் பெற்றோர் சென்னையில் தங்கி பானிபூரி கடை நடத்தி வருகின்றனர். மவுனிஷ் மற்றும் அனுஷ்கா கூடப்பட்டில் தாத்தா பெருமாளின் பராமரிப்பில் வளர்ந்து வந்தனர். கோடை விடுமுறை என்பதால் பெற்றோரை பார்க்கவேண்டும் என கூறியதால் பேரன், பேத்தியுடன், தாத்தா சென்னைக்கு சென்றுவிட்டு ரயிலில் திரும்பினார். ரயில் நிலையத்தில் இருந்து பைக்கில் திரும்பிய நிலையில் கார் மோதியதில் மவுனிஷ் பலியானான். சிறுவன் போதையில் ஓட்டி வந்த கார் மோதி மேலும் சிலர் லேசான காயம் அடைந்திருக்கலாம். அது தொடர்பாக புகார் வரவில்லை என போலீசார் தெரிவித்தனர். இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர். இதனிடையே கார் மோதும் சிசிடிவி காட்சிகள் வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மின்னல் தாக்கி 3 பெண்கள் பலி



**உசிலம்பட்டி, மே 27:** மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே சூலப்புரத்தை சேர்ந்த பொன்னையா என்பவரது தோட்டத்தில் நேற்று பருத்தி எடுக்கும் வேலை நடைபெற்றது. இந்த பணிகளில் இதே ஊரை சேர்ந்த ராமுத்தாய் (58), தனிக்கொடி (52), கணபதியம்மாள் (60), வாசி அம்மாள் (56) உள்ளிட்ட பலரும் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த பகுதியில் திடீரென பலத்த காற்று மற்றும் இடி, மின்னலுடன் மழை பெய்தது.

இதனால் பருத்தி எடுக்கும் பணிகளை நிறுத்திவிட்டு, அனைவரும் அருகில் உள்ள மரத்தடியில் ஒதுங்கினர்.

அப்போது திடீரென மின்னல் தாக்கியதில் ராமுத்தாய், தனிக்கொடி, கணபதியம்மாள் ஆகிய மூன்று பேரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பலியாகினர். வாசி அம்மாள் பலத்த காயமடைந்தார்.


**தெற்கு இரயில்வே**

**எண். M-TRD-29-I-OT-25-26-26R2, 28R2 மற்றும்,**
**எண். M-TRD-29-I-OT-2026-27-06R, 07 தேதி: 22-05-2026**

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் கோட்ட இரயில்வே மேலாளர் / ட்ராக்ஷன் விநியோக கிளை, சென்னை கோட்டம், தெற்கு இரயில்வே, சென்னை – 3 அவர்கள், பின்வரும் பணிகளுக்காக அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.ireps.gov.in

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி எண் /பணி பற்றிய விவரம் | மதிப்பு ₹ | மூடப்படும் தேதியும் நேரமும் |
|---|---|---|---|
| 1 | **ஒப்பந்தப்புள்ளி எண்.M-TRD-29-I-OT-25-26-26R2** சென்னை கோட்டத்தின் AJJ - JTJ பிரிவில் உள்ள கேதாண்டிப்பட்டி (KDY) ல் அப் லூப் லைன் அமைத்தல் தொடர்பாக ஏற்கனவே உள்ள OHE க்கு மாறுபாடு | 8598670.30 | 15/06/2026 அன்று 15:00 மணி |
| 2 | **ஒப்பந்தப்புள்ளி எண்.M-TRD-29-I-OT-25-26-28R2** சென்னை கோட்டத்தின் MAS - RU மற்றும் AJJ - JTJ பிரிவில் ஏற்கனவே உள்ள 65 சதுர மிமீ பலவீனமான கேட்டனரி ஒயரை மாற்றியமைத்தல் | 23014130.00 | 15/06/2026 அன்று 15:00 மணி |
| 3 | **ஒப்பந்தப்புள்ளி எண்.M-TRD-29-I-OT-2026-27-06R** சென்னை கோட்டத்தின் புறநகர் (சப் அர்பன்) பிரிவுகளில் சில்வர் பிரேசுடு / கோடல் லைப் முடிவடைந்த கான்டாக்ட் ஒயரை அதன் நிலைமைக்கு ஏற்ப, அகற்றுவதன் மூலமாக ஏற்கனவே உள்ள OHE க்கு மாறுபாடு | 29438631.00 | 15/06/2026 அன்று 15:00 மணி |
| 4 | **ஒப்பந்தப்புள்ளி எண்.M-TRD-29-I-OT-2026-27-07** சென்னை கோட்டத்தின் மெயின் லைன் மற்றும் லூப் லைன்களில் ட்ராம் வே OHE யை மரபு ரீதியான OHE ஆக மாற்றுதல் | 51347332.00 | 15/06/2026 அன்று 15:00 மணி |

**கோட்ட இரயில்வே மேலாளர், ட்ராக்ஷன் விநியோக கிளை, சென்னை கோட்டம், சென்னை - 3**



**pnb Housing Finance Limited** Ghar Ki Baat

**பிற்சேர்க்கை–IV–A அசையாச் சொத்து(கள்) மின்–ஏலம் பொது விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு**

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கி.அ. சென்னை: எண்.14, சுதர்ஷன் பில்டிங், 3ஆவது தளம், ஒய்ட்ஸ் சாலை, பீட்டர்ஸ் காலனி, ராயப்பேட்டை, தினமலர் அலுவலகம் எதிரில், சென்னை–600014, கி.அ. தாம்பரம்: 3 ஆவது தளம், 104/1, முத்துலிங்க ரெட்டி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை–600045, கி.அ. அம்பத்தூர்: வாகை பில்டிங், 2 ஆவது தளம், செக்–1, அம்பத்தூர் தொழிற்பேட்டை, 2 ஆவது பிரதான சாலை, சென்னை–600058.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி **"உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்"** விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

| கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A) | கோரப்பட்ட தொகை & நாள் (B) | சுவாதீன தன்மை (C) | அடமானச் சொத்துகள் விவரம் (D) | நிர்ணய விலை (RP) (E) | முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் 10%) (F) | ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G) | ஏலம் உயர்த்தும் விகிதம் (H) | பார்வையிடும் நாள் & நேரம் (I) | ஏலம் நாள் & நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| HOU/TBM/1118/599739 N புஷ்பா/ N கண்ணன், கி.அ.: தாம்பரம் | Rs. 4071103.22 & 25-04-2024 | கையக சுவாதீனம் | மனை எண்.70, பிளாட் எண்.F3, முதல் தளம், க்ரீன் பார்க், திருவேற்காடு, சென்னை, தமிழ்நாடு–600077, சென்னை, இந்தியா. | Rs. 26,35,000 | Rs. 263500 | 10-06-2026 | Rs. 10,000 | 02-June-2026,11AM to 5PM | 11-June-2026,02Pm to03Pm | அறியப்படாதது |
| HOU/AMB/0719/721077, NHL/AMB/0719/721087 கோபிநாத் ராவ் K S, சாந்தி பிரியா M கி.அ.: அம்பத்தூர் | Rs. 3507175.69 & 25-04-2024 | கையக சுவாதீனம் | எண்.53, F3, அரவிந்த் கோகுலம் அபார்ட்மென்ட், சாமுண்டீஸ்வரி தெரு, காந்தி நகர், கள்ளிக்குப்பம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா–600053. | Rs. 26,85,000 | Rs. 268500 | 10-06-2026 | Rs. 10,000 | 02-June-2026,11AM to 5PM | 11-June-2026,02Pm to03Pm | அறியப்படாதது |
| HOU/CHE/1117/454889 J J.ருத்ரமூர்த்தி, ஜெயச்சந்திரா R / பாபூ கேட்டரர்ஸ் & ஹயரர்ஸ் கி.அ.: சென்னை | Rs. 1744071.3 & 02-11-2018 | கையக சுவாதீனம் | சிறுபுழல்பேட்டை கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம், மனை எண்.90, அன்னை கங்கம்மாள் நகர், அங்கீகரிக்கப்பட்ட லே அவுட் டிடிசிபி எண்.1/1980, சர்வே எண்கள்: 399/1&399/3 இல் உள்ளடங்கிய 2400 ச.அடி நிலமும் அதனுடன் உள்ள துண்டு மற்றும் பகுதிகள் அடங்கிய சொத்து. எல்லைகள்: வடக்கில்: மனை எண்: 89, தெற்கில்: மனை எண்.91, கிழக்கில்: 30 அடி லே அவுட் சாலை, மேற்கில்: மனை எண்.77, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 40 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 40 அடி. சென்னை வடக்கு பதிவு மாவட்டம், கும்மிடிப்பூண்டி சார் பதிவு மாவட்டத்தில் உள்ள சொத்து. | Rs. 7,14,000 | Rs. 71400 | 10-06-2026 | Rs. 10,000 | 02-June-2026,11AM to 5PM | 11-June-2026,02Pm to03Pm | அறியப்படாதது |

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்என்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்– K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். 3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், விற்பனை உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நாட்கள் கட்டாயக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விற்பனைப் பரிசீலனைத் தொகையின் பகுதிப் பணத்தைப் பறிமுதல் செய்வார், மேலும் சொத்து/கடனீட்டு சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின்படி மறுவிற்பனை செய்யப்படும்.4. **M/s. ஃபோர்குளோசர்இந்தியா. காம் மின்-ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் 605 ஏ, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட், ஹைதராபாத்-500038, இணையதளம்-info@bank.eauctions.in இடத்தில் அதன் தலைமை அலுவலகம் கொண்டிருக்கும் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபர்களான திரு. ஏங்கெல்ஸ்/ துர்கேஷ்/ ஜோதிகண்ணன்/ ஸ்ரீ சரண், செல்பேசி: 9344007827/ 9042840151/ 9840487424 / 9738931789, கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800 120 8800, மின்னஞ்சல்: auction@pnbhousing.com தொடர்பு கொள்ளவும் அல்லது www.pnbhousing.com -ஐ காணவும்.**

**இடம்: சென்னை, நாள்: 27-05-2026** **ஓம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**